Reg. No. : ......................................

Name : ...........................................

**FY-312**

**FIRST YEAR HIGHER SECONDARY MODEL EXAMINATION – 2021**

Part – II

**TAMIL**

Maximum : 80 Scores

Time : 2½ Hours

Cool-off time : 20 Minutes

***General Instructions to Candidates :***

- There is a 'Cool-off time' of 20 minutes in addition to the writing time.
- Use the 'Cool-off time' to get familiar with questions and to plan your answers.
- Read questions carefully before answering.
- Read the instructions carefully.

**1 முதல் 6 வரையுள்ள வினாக்களுக்குள் எவையேனும் மூன்றனுக்கு சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுங்கள். மதிப்பெண் 1 வீதம் (3 × 1 = 3)**

1. புணர்ந்தாரை பிரியாமை என்பது

(அ) ஆற்றுதல் (ஆ) போற்றுதல்

(இ) பண்பு (ஈ) அன்பு

2. இந்திரவிழாவை சிறப்பித்துக் கூறும் நூல்

(அ) மணிமேகலை (ஆ) சீவகசிந்தாமணி

(இ) சிலப்பதிகாரம் (ஈ) வளையாபதி

3. ஆய கலைகள் எத்தனை ?

(அ) 44 (ஆ) 54

(இ) 64 (ஈ) 74

4. "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே" இந்த நூற்பா இடம் பெறும் நூல்

(அ) தொல்காப்பியம் (ஆ) நன்னூல்

(இ) தண்டியலங்காரம் (ஈ) வீரச்சோழியம்

5. மகவு – என்பதன் பொருள்

(அ) மாலை (ஆ) மேகம்

(இ) குழந்தை (ஈ) மருந்து

6. "மனிதனோ அவன் படைப்போ அல்ல இயற்கை" என்று கூறியவர்.

(அ) தனிநாயக அடிகளார் (ஆ) பிளாட்டோ

(இ) வைட்பீல்டு (ஈ) வேட்ஸ்வொர்த்

**7 முதல் 14 வரையுள்ள வினாக்களுக்குள் எவையேனும் நான்கனுக்கு ஒன்றோ இரண்டோ வாக்கியங்களில் விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் 2 வீதம் (4 × 2 = 8)**

7. "பண்பாடு" – சிறு குறிப்பு எழுதுங்கள். **(2)**

8. பின்வருவனற்றுள் தமிழக நாட்டுப்புற கலைகளை எடுத்தெழுதுங்கள் (கதகளி, தெருக்கூத்து, வில்லுப்பாட்டு, தெய்யம்)

9. வைகுண்ட வைத்தியர் நாடகம் இந்த சமூகத்திற்கு உணர்த்தும் செய்தியினை சிறு குறிப்பாக எழுதுங்கள்.

10. பின்வரும் வாக்கியங்களில் சரியானவற்றை தேர்ந்தெடுத்து எழுதுங்கள்.

(அ) குறுந்தொகை எட்டுத்தொகை நூற்களில் ஒன்று

(ஆ) குறுந்தொகை பத்துப்பாட்டு நூற்களில் ஒன்று

(இ) குறைந்த அடிகள் கொண்ட பாடல்களின் தொகுப்பாக இருப்பதால் இது குறுந்தொகை எனப் பெயர் பெற்றது

(ஈ) குறுந்தொகை புறம் சார்ந்த நூலாகும்

11. வயல் நிலங்களில் தொழிற்சாலைகள் கட்டுவதால் ஏற்படும் பிரச்சனைகளை எழுதுங்கள்.

12. நீலகிரி மாவட்டத்தில் நேர்ந்த நிலச்சரிவுக்கான இரண்டு முதன்மை காரணங்களை எழுதுங்கள்.

13. இயற்கை காட்சிகள் வழியாக மனிதர்கள் அடையும் நன்மைகளை எழுதுங்கள்

14. "பயண இலக்கியங்கள்" – சிறு குறிப்பு எழுதுங்கள்

DITTO WS

**15 முதல் 24 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் 5 வினாக்களுக்கு அரைப்பக்கத்திற்கு மிகாமல் விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் 4 வீதம்**

**(5 × 4 = 20)**

15. “தன்னியல்பு கெடாது காலகதியோடு ஒன்றிணைந்து செல்வதுதான் தமிழ்ப் பண்பாட்டின் இயற்கை” இக்கூற்றை நிருபித்து எழுதுங்கள்.

16. ஒயிலாட்டம் என்னும் கலை வடிவம் குறித்து விளக்கக் குறிப்பு எழுதுங்கள்.

17. கீழே தரப்பட்டுள்ள படங்களில் வெளிப்படும் மெய்ப்பாடுகளை எழுதுங்கள்


(அ)



(ஆ)



(இ)



(ஈ)



18. ‘மருமக்கள்வழி மான்மியம்’ – பாடப்பகுதி உணர்த்தும் சமூகசீர்திருத்தச் செய்தியை வானொலி உரையாக எழுதுங்கள்.

19. “பெண்ணியம்” – என்ற தலைப்பில் பெட்டிச் செய்தி தயார் செய்யுங்கள்.

20. பின்வரும் பகுதியினை தூய தமிழில் எழுதுங்கள்.

“எனக்கு வயசாயிடுச்சி மின்ன மாதிரி ஓடியாட முடியல புள்ளைங்களுக்கும் வெள்ளாமபத்தி ஒண்ணும் தெரியாது. பெரியவன் ஏதோ தோல் பாக்டரி கட்டப்போறானாம். ரோட்டோரமா தண்ணி வசதியோட உள்ள நம்ம நெலந்தான் அதுக்கு தோதுபடும்னு சொல்றான் நெல்லு அறுப்பு முடிஞ்சதும் அளவுபோட வருவானுங்க கூடமாட இருந்து செய்யி”.

21. நீங்கள் கண்டுகளித்த இயற்கைக் காட்சியை வருணனையாகக் எழுதுங்கள்.

22. தமிழ்க் கவிஞர்கள் இயற்கையை மனித வாழ்க்கையோடு பயன்படுத்திய முறைகளை வரிசைப்படுத்தி எழுதுங்கள்.

23. ஏற்றபடி இணைத்து எழுதுங்கள்.

(அ) பாரதிதாசன் – புனலும் மணலும்

(ஆ) வைரமுத்து – அழகின் சிரிப்பு

(இ) ஆ. மாதவன் – நீரில் எரியும் நெருப்புகள்

(ஈ) திருவேணி – மூன்றாம் உலகப்போர்.

24. பின்வரும் பகுதியினைப் படித்து கேட்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு விடை எழுதுங்கள்.

"கால்காவிலிருந்து சிம்லாவுக்கு அறுபது மைல். இதற்குச் சிறிய மலை இரயில் அமைத்திருக்கிறார்கள். கால்காவிலிருந்து சிம்லாவுக்கு நல்ல அருமையான ரோடு அமைத்திருக்கிறார்கள். நான்கு பேர் ஏறக்கூடிய சௌகரியமான வாடகை மோட்டார்கள் ஓடுகின்றன. மோட்டாரில் பிரயாணம் செய்தால் மூன்று மணி நேரத்தில் சிம்லாவை அடையலாம். சில சுதேச சமஸ்தானங்களில் நெல் விளைவு உண்டு.

(அ) கால்காவிலிருந்து சிம்லாவிற்கு எவ்வளவு தூரம்?

(ஆ) மோட்டார் வாகனத்தில் எத்தனை பேர் பிரயாணம் செய்யலாம்?

(இ) மோட்டார் வாகனத்தில் பிரயாணம் செய்தால் எத்தனை மணி நேரத்தில் சிம்லாவை அடையலாம்.

(ஈ) சுதேச சமஸ்தானங்களில் விளையும் தானியம் எது?

**25 முதல் 30 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் 3 வினாக்களுக்கு ஒரு பக்கத்திற்கு மிகாமல் விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் 5 வீதம் (3 × 5 = 15)**

25. அழிந்துவரும் நாட்டுப்புற கலைகளை அழியாமல் பாதுகாக்கும் பொருட்டு கலை பண்பாட்டுத் துறைக்கு கடிதம் எழுதுங்கள்.

26. பின்வரும் பாடலை நயம் பாராட்டி எழுதுங்கள்.

"சுரிகுழல் அசைவுற அசைவுறத்
துயிலெழு மயிலென மயிலெனப்
பரிபுரம் ஒலியெழ ஒலியெழப்
பனிமொழி யவர்கடை திறமினோ"

- கலிங்கத்துப்பரணி

27. கீழே கொடுக்கப்பட்டுள்ள கவிதை வரிகளுக்கு விமர்சனக் குறிப்பு எழுதுங்கள்

"எல்லாப் படிகளும் ஏறி இறங்கி
வாணாள் கொடுத்து வாண தீர்த்தம்
ஆட ஆளும் நீரோ? ஐயோ!
கோர்டு பீஸீ குமஸ்தா பீஸீ
கூடிக் காப்பி குடிக்கப் பீஸீ
வெற்றிலை வாங்கிட வேறொரு பீஸீ
வக்கீல் பீஸீ மகிமைப் பீஸீ
வக்காலத்து வகைக்கொரு பீஸீ.

-கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

28. உலக மகளிர் தின நாளை முன்னிட்டு உங்கள் பள்ளிக்கு வருகை தந்து 'பெண்ணியம்' என்ற தலைப்பில் சிறப்புரையாற்ற இருக்கும் கவிஞர் சல்மா அவர்களுக்கு பாராட்டுரை எழுதுங்கள்.

29. கீழே கொடுக்கப்பட்டுள்ள கவிதைகளைப் படித்து ஒப்பிட்டுக் குறிப்பு எழுதுங்கள்

"மான்பாய வயலருகே மரமேறி
மந்திபாய மடுக்கள் தோறும்
தேன்பாய மீன்பாய செழுங்கமல
மொட்டலரும் திருவையாறே"

-திருஞானசம்பந்தர்.

"உலகம் உவப்ப வலனேர்புதிரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு
ஓவற இமைக்குஞ் சேண்விளங்கு அவிர் ஒளி"

-நக்கீரர்.

30. சமூக வலைத்தளங்கள் வழியாக கவிஞர் சிற்பி அவர்களை நேர்காணல் நடத்திட 5 வினாக்கள் அடங்கிய வினா நிரல் தயார் செய்யுங்கள்.

**31 முதல் 36 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் 3 வினாக்களுக்கு ஒன்றரைப் பக்கத்திற்கு மிகாமல் விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் 6 வீதம் (3 × 6 = 18)**

31. "கலைகளின் வளர்ச்சியில் ஊடகங்களின் பங்களிப்பு" என்ற தலைப்பில் உரையாற்றுவதற்கான சொற்பொழிவுரை தயார் செய்யுங்கள்.

32. கீழே கொடுக்கப்பட்டுள்ள விழாக்களில் எவையேனும் ஒரு விழாவைப் பற்றி சிறு கட்டுரை எழுதுங்கள்.

பொங்கள்

ஓண விழா

குறிப்புக்கள்

விழாவிற்கான காரணம்

கொண்டாடும் முறை

உணவு வகைகள்

33. "பெண்கள் சந்திக்கும் பிரச்சனைகளும் தீர்வுகளும்" என்ற தலைப்பில் பத்திரிகைக்கு தலையங்கம் எழுதுங்கள்.

34. "கண்டல் மரங்களல்ல கரங்கள்" என்ற தலைப்பில் பத்திரிக்கைச் செய்தி தயார் செய்யுங்கள்

35. உலகச் சுற்றுச்சூழல் தினத்தையொட்டி உங்கள் பள்ளியில் "பழந்தமிழரின் ஐந்திணை அடிப்படையிலான வாழ்வு இயற்கையை பாதுகாத்தது/பாதுகாக்கவில்லை என்ற தலைப்பில் நடைபெற உள்ள பட்டிமன்றத்தில் பங்கேற்று ஏதேனும் ஓர் அணி சார்பில் பேசிட பட்டிமன்றக் குறிப்பு தயார் செய்யுங்கள்.

36. பின்வரும் குறிப்புக்களைப் பயன்படுத்தி செய்தித்தொகுப்பு தயார் செய்யுங்கள்.

பெயர் - சி.வை. தாமோதரம் பிள்ளை

பிறப்பு – செப்டம்பர் 12 1832, சிறுப்பிட்டி, யாழ்ப்பாணம், இலங்கை

கல்வதி - கணிதம், வானவியல், தத்துவம் (யாழ்ப்பாண வட்டுக்கோட்டைப் பல்கலைக்கல்லூரி) கலைமாணி -சென்னைப் பல்கலைக்கழகம் B.L. சட்டம்

பணி - தொடக்கநிலை ஆசிரியர், தமிழாசிரியர், உரையாசிரியர், உயர் அலுவலர், முறைமன்ற நடுவர்.

பதிப்புக்கள் - தொல்காப்பியம் சொல்லதிகாரம் சேனாவரையர் உரை(1868)

நீதி நெறி விளக்கம் (1854)

தணிகைப்புராணம் – 1883

விருது - இராவ் பகதூர்

மறைவு - ஜனவரி 1, 1901

**37 முதல் 40 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் 2 வினாக்களுக்கு இரண்டு பக்கத்திற்கு மிகாமல் விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் 8 வீதம்**

**(2 × 8 = 16)**

37. பள்ளி இலக்கிய மலரில் வெளியிடும் பொருட்டு "தமிழர் பண்பாடும் இலக்கியமும்" என்ற தலைப்பில் கட்டுரை எழுதுங்கள். பின்வரும் குறிப்புக்களைப் பயன்படுத்தவும்

- பண்பாடு
- திருக்குறள் (959)
- கலித்தொகை (133)
- புறநானூறு (182)
- புறநானூறு (192)

38. பின்வரும் குறிப்புகளின் அடிப்படையில் "காலந்தோறும் தமிழிலக்கியத்தில் சுவைகளின் போக்கு" எனும் தலைப்பில் கட்டுரை எழுதுங்கள்.
குறிப்புகள்
.இன்பம் . காதல் . வீரம் . அவலம் .நகைச்சுவை

39. "இயற்கை நலனே மனித நலன்" எனும் தலைப்பில் கருத்தரங்கக் கட்டுரை தயார் செய்யுங்கள்.

40. "மூன்றாம் உலகப்போர்" என்ற நாவல் பகுதியின் அடிப்படையில் "கடல் மாசுக்களும் உயிரினச் சிதைவும் என்ற தலைப்பில் திறனாய்வுக் கட்டுரை எழுதுங்கள். பின்வரும் குறிப்புகளைப் பயன்படுத்தவும்.
குறிப்புக்கள்

- உயிரினச் சிதைவு
- கடலில் எண்ணெய்க் கசிவு
- கடலில் சுனாமி.